# மானிடவியல் நோக்கில் முல்லைசார் கற்பு

# Mullai Karpu in Anthropological Perspective

**புவனேஸ்வரி மு,** உதவிப்பேராசிரியர், மொழித்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் –006.

**Bhuvaneswari M**, Assistant Professor, Department of Languages, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 006

**DOI: 10.5281/zenodo.5904969**

## Abstract

All the research that puts forward the departmental discipline of Mullai goes on to record that Karpu is the most talked about in Mullai. Tolkappiyam talks about the grammar and biological background of urchin habitat or umbilical cord formation and how they can be arranged. Similarly, the Sangam literature written with a Tolkappiya background also talks about Mullai's biology. Be that as it may, this article is based on the twofold theories of  Kalavu Karpu, which explore what is the reason for reminding / instructing Karpu only in the life of a Mullaitivu chief.

**Keywords** Mullai, Tholkapiyam, Sangam Literature, Kalavu, Karpu.

## முன்னுரை

முல்லை எனும் திணைசார் ஒழுக்கத்தை முன்வைக்கும் ஆராய்ச்சிகள் அனைத்தும் முல்லை சான்ற கற்பு என முல்லைநிலத்திலேயே கற்பு என்பது அதிகம் பேசப்படுவதாகப் பதிவிட்டுச் செல்கின்றன. முல்லை அகவாழ்வு அல்லது முல்லை நில உருவாக்கம் குறித்துத் தொல்காப்பியம் இலக்கண அடிப்படையிலும் வாழ்வியல் பின்னணியிலும் அவை எவ்வாறு அமையக்கூடும் என்பது குறித்தும் பேசுகின்றது. அதுபோல, தொல்காப்பியப் பின்னணியைக் கொண்டு இயற்றப்பெற்ற சங்க இலக்கியங்களும் முல்லைசார் வாழ்வியல் குறித்துப் பேசுகிறது. இருக்க, களவு கற்பு எனும் இருவகை கைகோள்களை அடிப்படையாக மக்கள் வாழ்வியலில் முல்லை நிலத் தலைவியருக்கு மட்டும் கற்பு குறித்து நினைவூட்ட/அறிவுறுத்தற்கான காரணம் என்ன என்பது குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கருதுகோள்

முல்லை எனும் சமூகக் கட்டமைப்பு தலைவன் தலைவியை வினையின்கண் பிரியத் தலைக் காத்திருத்தலும், அவ்வாறு காத்துநிற்கும்பொருட்டு அவள் கற்பிலிருந்து பிறழாதவளாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகவே முல்லைக்கண் கற்பு அதிகம் பேசப்படுகிறது என்ற கருத்துள்ளது. மானிடவியல் நோக்கில் குறிஞ்சியாகிய தாய்வழிச் சமூகத்திலிருந்து முல்லையாகிய தந்தைவழிச் சமூகத்திற்கு மக்கள் நகரும்போது தலைவி, தலைவன் வினையின்பொருட்டு பிரியும் தறுவாயில் அவள் இன்னொரு தலைவனை நாடக்கூடாது என்பதற்காக அங்கு கற்பு வலியுறுத்தப்பட்டது எனும் கருத்துள்ளது. எனவே, கற்பு என்றால் என்ன? முல்லை சான்ற கற்பு எனும் பொருண்மைக்குரிய காரணம்தான் என்ன? மற்ற நிலங்களுக்கும் கற்புக்கொள்கைக்கும் தொடர்பில்லையா? ஏன் முல்லை நிலப் பெண்களுக்கு மட்டும் கற்பு குறித்து

வலியுறுத்தப்படுகிறது? என்ற பல்வேறு கேள்விகளுக்குப் பொருள் தேடும் நோக்கமே இக்கட்டுரைக்கான கருதுகோள் ஆகும்.

**முல்லை**

**மாயோன் மேய காடுறை உலகமும் (தொல்.பொருள்.அகத்.5)**

**காரும் மாலையும் முல்லை (தொல்.பொருள்.அகத்.6)**

என வரும் சூத்திரங்கள் முல்லைக்குரிய நில, தெய்வம் மற்றும் பொழுதுகள் குறித்தப் புரிதலை ஏற்படுத்துகிறது. நம் தேசம் காடு, மலை, கடல் சார்ந்த பரப்புகளைக் கொண்டுள்ளது அவ்வியற்கை சூழலுக்கு ஏற்றதான மக்கள் தம் வாழ்வியலையும் தகவமைத்துக் கொண்டுள்ளனர் என்பது திண்ணம். காரும் மாலையும் குறித்து தொல்காப்பியம் பேசியதற்குக் காரணம் இலக்கியங்களே. ஏனெனில் வருணனையில்லா இலக்கியங்கள் இல்லை. அதுபோல, கற்பனைகளே இலக்கியங்களாகவும் இல்லை. ஆக, இப்பொழுதுகள் குறித்து தொல்காப்பியர் பேசக் காரணம் பாடல்களை அமைப்பதற்கு ஏற்ற வருணனைகளுக்காகவே அன்றி, அவையே நிலத்தின் பொழுதுகளாக இருக்கமுடியாது என்பது அறிவியல். இவ்வாறு சிலவற்றை கவித்துவ நோக்கிலும் காணவேண்டியுள்ளது.

**கற்பு**

**கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே (தொல்.பொருள்.கற்.140)**

“கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது என்றவாறு” (தொல்.பொருள்.பக்.119) என விளக்கம் தருகிறார் இளம்பூரணர். ஆக, களவின்பொருட்டோ அல்லது பெற்றோர் விருப்பம் கருதியோ தலைவன் தலைவி ஆகிய இருவரது தனிவாழ்க்கை கரணத்திற்கு பின் இல்லறம் எனும் கூட்டு வாழ்க்கையாய் அமைவதே கற்பு அல்லது கற்பு வாழ்க்கை எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இது விடுத்து, நாம் கற்பு என்பதற்கு சில கற்பிதங்களை உருவாக்கிக் கொண்டுள்ளோமா என்ற ஐயம் எழுகிறது.

முல்லைத்திணைப் பாடல்கள் பெரும்பான்மை கற்பு வாழ்க்கை குறித்தே பேசுகிறது. திருமணம் எனும் பந்தத்தில் இணைந்த தலைமக்களாகவே தலைவியும் தலைவனும் அமைகின்றனர். இருக்க, தொல்காப்பியம் குறிப்பிடும் காத்திருத்தல் எனும் உரிப்பொருளே இக்கற்பிதங்களுக்கு காரணிகளாக அமையலாம். இருத்தலும் இருத்தலுக்குரிய நிமித்தங்களும் முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளாய் அமைகின்றன **(தொல்.பொருள்.பக்.16)**. தலைவன் பொருள் தேடியோ அல்லது அரசனுக்கான காவல் பணிகளை மேற்கொள்ளவோ தலைவியை விட்டு நீங்கிச் செல்வான். அவ்வாறு பிரிந்து சென்ற தலைவன் சென்ற தலைவனும் தலைவியோடு சேர்ந்து இல்லறம் நடத்தக் காத்திருப்பான். அதுபோன்ற நிலையே தலைவி இடத்திலும் காணமுடிகிறது. இருப்பினும் ‘பெண்கள் சோகம் பெரும் சோகம் தானே’ என்பதற்கு இணங்க தன்

உள்ளக்கிளர்ச்சியை; பிரிவாற்றாமையைத் தன் தோழியிடமோ பிறரிடமோ புலம்பித் தீர்க்கிறாள் முல்லைத் தலைவி. அப்போது தலைவன் விரைவில் வருகிறான். காத்திருப்பாய் என தோழி தேற்றுவாள். சில வேளைகளில் தலைவி தன்னைத் தான் தேற்றிக்கொள்ளுதலும் உண்டு. இஃது ஓர் எதார்த்தப் பாங்கே அன்றித் தலைவனை விட்டுத் தலைவி நீங்கி கற்பில் வழுவிநிற்கக் கூடும் என்பதற்கான எச்சரிக்கை மொழிகள் அல்ல. மானிடவியல் நோக்கில் முல்லைத்திணை மக்களின் வாழ்வியல் தாய்வழிச் சமூகத்தின் இறுதியும் தந்தைவழிச் சமூகத்தின் தோற்றத்திற்கு ஆரம்பமாயும் அமையலாம். ஆனால் இங்கு தலைவி கற்பில் பிறழ்வதற்கான காரணமுள்ளது; அதற்காக இங்கு கற்பு அதிகம் பேசப்படுகிறது எனும் கருத்து பொருந்தாது.

**காட்சிப்பின்னணி – கருத்துப்பின்னணி**

**மழை விளையாடும் குன்று சேர் சிறுகுடிக்**
**கறவை கன்றுவயின் படர, புறவில்**
**பாசிலை முல்லை ஆசு இல் வான் பூச்**
**செவ் வான் செவ்வி கொண்டன்று;**
**உய்யேன் போல்வல்-தோழி!-யானே.** (குறுந்.108)

தலைவி ஒருத்தி தன் பிரிவாற்றாமையை தோழியுடன் பகிர்ந்துகொள்கிறாள். அஃதாவது, மேகங்கள் விளையாடுதற்கிடமாகிய மலையைச் சேர்ந்த சிறிய ஊரினிடத்து, மேய்ச்சலுக்குச் சென்ற ஆவினங்கள் சூரியன் மறையும் மாலை வேளையில் தன் கன்றுகளை அடைதற்பொருட்டு சென்றன. மேலும், முல்லை மலரானது தன் இதழ்களை பரப்ப மாலை எனும் சிறுபொழுது தோன்றியதாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. இத்தகைய இக்கார்ப்பருவ வர்ணனை சொல்லப்பட்டதற்குக் காரணம், தலைவன் ‘இன்று போய் நாளை வாரேன்’ என்பது போல் வேறு ஒரு பருவத்திற்கண் நீங்கும் தலைவன் கார்ப்பருவம் வந்தபின் யான் வருவேன் எனக் கூறிச் செல்கிறான். தலைவன் கூறிச்சென்ற அப்பருவம் வந்தும் தலைவன் வாராது இருக்கிறானே என்ற பயமும் பரிதவிப்புமே முல்லை நில பெண்களிடத்தில் காணமுடிகிறது. குறிஞ்சியிலும் இதுபோன்ற காத்திருப்புகள் உளது. தலைவன் தலைவி சொன்ன குறியிடத்து வாராமல் காலம் தாழ்த்தும்போது தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள். நெய்தல் நில இரங்கலிலும் கூட இவ்வாறானதே. கடல் பயணம் மேற்கொண்டத் தன் தலைவன் எப்போது வருவான் என்ற காத்திருப்பும் இருத்தல் தான் என்றிருக்க, காத்திருத்தலை முல்லைக்கு மட்டும் உரித்தானதாக தொல்காப்பியம் சுட்டுதற்கு காரணம் என்னையெனின், அது இலக்கிய காட்சிப்பின்னணிக்குப் பொருந்தக் கூடும் என்பதாகக் கொள்ளலாம்.

**வருதும் என்ற நாளும் பொய்த்தன**
**அரியேர் உண்கண் நீரும் நில்லா**
**தண்கார்க்கு ஈன்ற பைங்கொடி முல்லை**
**வைவாய் வான்முகை அவிழ்ந்த கோதை** (அகம்.144, 1-4)

என வரும் பாடலடிகள் வினைமுற்றியத் தலைவன், தலைவி இவ்வாறு எண்ணுவாள் எனத் தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் பாகனிடம் கூறியது. அவனே, பின்னர்

**கூர்வாள் குவிமுகஞ் சிதைய நூறி**
**மானடி மருங்கில் பெயர்த்த குருதி**
**வான மீனின் வயின்வயின் இமைப்ப**
**அமரோர்த்து அட்ட செல்வம்**
**தமர்விரைந்து உரைப்பக் கேட்கும் ஞான்றே. (அகம்.144,15-19)**

இத்தகைய சிறப்பானதொரு போரில் தன் வீரத்தை ஊரார் போற்ற பறைசாற்றினான் நின் தலைவன் என சுற்றத்தார் உரைத்தால், காலம் தாழ்த்தியதால் ஏற்பட்ட பிணக்கினை ஒழித்து உளமகிழ்வாள் தலைவி என தனக்குத் தானே தேற்றிக்கொள்கிறான் தலைவன். இப்பாடல், காத்திருப்பு என்பது இருவருக்குமானது; அவை ஏற்படுத்தும் துன்பமும் இருவருக்குமானது என்பதை உணர்த்துகிறது. மேலும், முல்லைவாழ் சூழலில் பெரும்பாலும் தலைவன் தலைவியை விட்டு சிறிதுகாலம் பிரியும் சூழல் ஏற்படுவதனாலேயே காத்திருத்தல் அல்லது ஆற்றியிருத்தல் என்பது இங்கு அதிகம் பேசப்பட்டிருக்கலாம். மேலும், அத்துன்பம் தலைவன் இத்தகைய செயல் புரிந்ததாலேயே காலதாமதம் ஏற்பட்டது என்ற புரிதல் தலைவிக்கு வரும்பொழுது காதல் மிகும். ஆக, முல்லை தலைவிக்கு காத்திருத்தல் எனும் கல்வி போதிக்கப்படுவதாய் இப்பாடல்களை அணுகத் தேவையில்லை.

மேலும், தொல்காப்பியம் முல்லைக்குரிய தலைமக்களாகிய ஆயர், ஆய்ச்சியர் மற்றும் வேட்டுவர்**(தொல்.அகத்.23)** என்பவரை திணைமக்களாகக் குறிப்பிடுகிறது. ஆனால், முல்லைக்கலி தவிர மற்ற முல்லைப்பாடல்களின் தலைமக்கள் ஆயராக இல்லை. வேட்டைத்தொழில் செய்யும் வேட்டுவ மக்களாயும் இல்லை. மாறாக, பொருள்வயிற் பிரிவோனாகவோ, அரசனது ஏவல்பொருட்டு பிரிவோனாகவோ இருக்கிறான். இவ்வாறான சூழலில் குறுகிய காலகட்டம் தலைவன் பிரிதலால் இங்கு தலைவி காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படும் எனலாம். ஆனால், ஆயர்குல மக்களின் வாழ்வில் நீண்ட கால பிரிவு என்பது கிடையாது. காலையில் மேய்ச்சலுக்குச் சென்ற தலைவன் மாலையில் மீள்வான். அவ்வாறிருக்க, இங்கு ஏன் காத்திருப்பு தலைவிக்கு மிகுந்த துன்பத்தைத் தரவேண்டும். ஆக, இவற்றை காட்சி பின்னணிக்கான பாடல்களாக அல்ல கருத்துப்பின்னணியையும் புலப்படுத்தும் பாடல்களாக ஆய்தலே சாலப்பொருந்தும்.

**முல்லை சான்ற கற்பு**

**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியற் குறுமக ளுறைவி னூரே (நற்றிணை.142)**
**தண்ணறும் புறவி னதுவே நறுமலர்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியற் குறுமக ளுறைவி னூரே (அகம்.274)**
**குல்லைஅம் புறவில் குவிமுகை அவிழந்த**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியள்**
**மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர் (சிறு.29,30)**

மேற்கண்ட மூன்று பாடல்களுமே முல்லையோடு கற்பைப் பொருத்திக் கூறுவனவாக உள்ளன. கற்பு குறித்து தொல்காப்பியத்தின் மிகப் பழைய உரையாசிரியராகிய இளம்பூரணர் தன்னுடைய விளக்கத்தில், "கற்பு என்பது – மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது"**(தொல்.பொருள்.பக்.247)** என்று கூறுகின்றார். தமிழ் விக்சனரி, இல்லற ஒழுக்கம் அல்லது ஒழுக்கம் எனப் பொருள் தருகிறது. கால மாற்றங்கள் பண்பாட்டில், கலாச்சாரக் கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியவாறே மொழியிலும் சில மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழில் வழங்கிவந்த எத்தனையோ நல்ல வார்த்தைகள் இன்றைக்கு கெட்ட வார்த்தைகளாக மாறிப்போயின என்பதையே எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். அதுபோலவே, அன்று கற்பு என சொல்லப்பட்டதற்கான பொருள் இன்று ஒழுக்கத்தில் தவறிப்போனவர்களுக்காக சொல்லப்பட்ட போதனை மொழியாக மாறிவிட்டது.

கற்பு என்ற வார்த்தைக்கு ஔவையார் அளிக்கும் பொருளாவது,

**கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை (கொன்றைவேந்தன்)**

சொன்ன சொல் மாறாமல் இருப்பது தான் கற்பு. அது உடல் சம்மந்தப்பட்ட விஷயம் அல்ல என்று கூறுகிறார். ஆக, முல்லை நிலப்பெண், நாட்டுக்காகப் போர்க்களம் சென்ற தம் கணவர் இல்லம் திரும்பும்வரை காத்திருந்து, அவன் திரும்பியபின் அவனுடன் இணைந்து ஈகைச் செயலும், கொடைச் செயலும் ஆற்றி மகிழ்ந்தும், தம் கணவனைப் போன்றே நாட்டுப்பற்றுடனும் மறவுணர்வுடனும் திகழ்ந்தாள் என்பது திண்ணம்.

**முடிவுரை**

மனிதப் பண்பாடுகளை ஆராயும்போது இலக்கண இலக்கியங்கள் தரும் தரவுகளைத் தாண்டி அவற்றின் உண்மைநிலையை மக்களது பிற பண்பாட்டு வழக்கங்களையும் உற்று ஆராய்தல் இன்றிமையாததாகிறது. அந்த வகையில், கற்பு எனும் சொல் பல்வேறு காலமாற்றத்திற்கு உட்பட்டு இன்று ஒரு பொருள்படும் சொல்லாக வழங்கப்பட்டு வருகிறது. இதனை வைத்து நாம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு சமூகப் பண்பாட்டினை சிதைக்க முடியாது. மேலும், தொல்காப்பியத்திற்கு பின்னால் உரைவகுத்த உரையாசிரியர் இளம்பூரணரும் உரையும் இதற்கு சான்றாதாரமாக அமைகிறது.

முல்லைநில மக்கள் தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழி சமூகத்திற்கு மாறும் முதல்நிலை மக்களாக இருக்கலாம். ஆனால், இல்லற ஒழுக்கத்திலிருந்து தவறியவர்களாகவோ அல்லது தவறக்கூடாது என அறிவுறுத்தப்பட்ட சமூகக்கூட்டமாகவோ இல்லை என்பது இக்கட்டுரையின் வாயிலாகப் பெறப்பட்ட உண்மை.

**துணைநின்ற நூல்கள்**


- அகநானூறு, ந.மு வேங்கடசாமி நாட்டார், ரா.வேங்கடாசலம் பிள்ளை, கழக வெளியீடு, 2007.
- குறுந்தொகை, திரு. பொ.வே. சோமசுந்தரனார், கழக வெளியீடு, 2007.
- கொன்றை வேந்தன், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்.

- தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர், கழக வெளியீடு, 2020.
- நற்றிணை நானூறு, அ.நாராயணசாமி ஐயர், கழக வெளியீடு, 2017
- பத்துப்பாட்டு, திரு. பொ.வே. சோமசுந்தரனார், கழக வெளியீடு, 2007.
- முல்லை மண்- மக்கள்- இலக்கியம், வாணி அறிவாளன், அருண் அகில் பதிப்பகம், 2015.
- https://www.vinavu.com/2019/05/21/chastity-meaning-in-tamil-sangam-literature-po-velsamy/
- https://ta.wiktionary.org/wiki/%E0%AE%95%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81


**References**


- Agananooru, N.M.Vengadasamy Nattar, R.Venkatachalam Pillai, Kazhaga Veliyeedu, 2007.
- Kurunthogai, P.V Somasuntharanar, Kazhaga Veliyeedu, 2007.
- Kondrai Vendan, Yazhpaanam Nallur Aarumuga Navalar.
- Tholkaapiyam, Porulathigaram, Ilampooranar, Kazhaga Veliyeedu, 2020.
- Natrinai Naanooru, A.Naarayasamy Iyer, Kazhaga Veliyeedu, 2017.
- Pathuppaatu, P.V Somasuntharanar, Kazhaga Veliyeedu, 2007.
- Mullai, Vaani Arivhalan, Arun Agil Publisher, 2015.
- https://www.vinavu.com/2019/05/21/chastity-meaning-in-tamil-sangam-literature-po-velsamy/
- https://ta.wiktionary.org/wiki/%E0%AE%95%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**புவனேஸ்வரி, மூ " மானிடவியல் நோக்கில் முல்லைசார் கற்பு"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 3, அக்டோபர் 2021, பக். 51-55

**Cite this Article in English**

**Bhuvaneswari, M. " Mullai Karpu in Anthropological Perspective"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 3, October 2021, pp. 51-55